ஜூன் 2018

அன்பான நண்பர்களே,

எமது மறைமாவட்டத்தில் பல டசின் நிறுவனங்கள் உள்ளடங்கலாக இந்நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பிறர் அன்புச் சேவை நிறுவனங்களின் செயற்பாடுகளை எதிர்மறையாக பாதிக்கும் ஆழமான சிக்கல் நிறைந்த ஒரு பிரச்சனை பற்றி உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மத்திய அரசு 2018 கனடா கோடைக்கால வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான அதன் விண்ணப்பப் படிவ நிபந்தனைகளை மாற்றம் செய்தது. விண்ணப்பதாரர்கள் அனைவரும் தமது சமய நம்பிக்கைகளுக்கு மாறாக கருக்கலைப்பு போன்ற விடயங்களுக்கு ஆதரவு தரும் வகையில் அவர்களை நிர்பந்திக்கும் ஒரு வசனத்தை சேர்த்துள்ளனர். இந்த அநீதியான விடயத்துக்கு நாம் இணங்க முடியாது.

இந்த மானியத்துக்கு விண்ணப்பித்த பல குழுக்கள் இந்த மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இதனுடன் தொடர்புடைய பெட்டியைப் பூர்த்தி செய்யாது தமது எதிர்ப்பை உறுதியாகப் பதிவு செய்வதற்காக படிவத்தை நிரப்பி இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனத் தெரிந்திருந்தும் விண்ணப்பித்தனர். நூற்றுக்கணக்கான ஏனைய பல குழுக்கள் ஊக்கமற்ற நிலையில் விண்ணப்பிக்க மறுத்தனர்.

இந்த புதிய விண்ணப்பப்படிவ நிபந்தனையினால் டொரோண்டோ மறை மாவட்டத்தில் மட்டும் குறைந்தபட்சம் 150 கோடைக்கால வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. செவிப்புலன் இழந்த குழந்தைகளுக்கான கோடை கால முகாம், வளர்ச்சிக்குன்றமுள்ள இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், மாணவர்கள் புல்வெட்டுதல் அல்லது தோட்டக்கலை சார்ந்த உதவிகள், நமது நாட்டிற்கு புதியவர்களை வரவேற்கும் குழுக்கள் போன்றவைக்கான முக்கியமான சமூக சேவைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

கனேடியன் முஸ்லிம் இமாம்களின் சங்கம், அமெரிக்கா யூத போதகர் சங்கம், கனடாவின் நற்செய்திக் கூட்டமைப்பு மற்றும் கனேடிய கிறிஸ்தவ சபைகளின் ஈகைக்கொடை நிறுவனம் உட்பட நாடெங்கிலும் உள்ள விசுவாச சமூகங்கள் (மற்றும் எல்லா கட்சிகளிலிருந்தும் அரசியல் வாதிகள்) இப்புதிய நிபந்தனைகளைக் கண்டனம் செய்துள்ளனர். ஒரு சமூகத்தின் நம்பிக்கைக் குழுக்களின் பங்களிப்பை மதிப்பதாகக் கூறும் அரசாங்கம் தாம் வழங்கும் நிதிக்குத் தகுதிபெறும்பொருட்டு எமது நம்பிக்கைக்கு எதிரான மதிப்பீடுகளை ஏற்க வேண்டும் எனக் கூறுவதை நாம் குறித்துக்கொள்ள வேண்டும்.

Thomas Cardinal Collins, Archbishop of Toronto | 1155 Yonge Street, Toronto, Ontario M4T 1W2

கனேடிய சட்ட உரிமைகள் சுதந்திரசாசனம் போன்றவற்றின் அடிப்படையிலேயே கனேடிய அரசாங்கம் சட்டத்தை மதிக்கும் தனிநபர்களையும், குழுக்களையும் நடாத்த வேண்டும். அச்சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனச்சாட்சி மற்றும் மதம், சிந்தனை, நம்பிக்கை, கருத்துரிமை, பேச்சுரிமை ஆகிய அடிப்படை சுதந்திரங்கள், சட்டபூர்வமான ஒழுங்கு முறையிலும் மற்றும் கொள்கையிலும் மதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த ஆண்டு நிதியுதவி மறுக்கப்பட்ட உள்ளூர் குழுக்களுக்கு ஆதரவாக எமது மறைமாவட்டத்தின் பல பங்குகளில் நிதி சேர்க்கப்படுகின்றது. உங்கள் பங்குகள் ஊடாக அல்லது இணையதளத்தில் நன்கொடை செய்ய நான் உங்களை ஊக்குவிக்கிறேன். http://bit.ly/donatesummerjobs. இன்னும் முக்கியமாக, savesummerjobs.ca ஐப் பார்க்கும்படி அனைவருக்கும் நான் அழைப்பு விடுகிறேன். எனவே உங்களுடைய காத்திரமான கவலையை கடிதம் வழியாக உங்கள் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினருக்கு நீங்கள் நேரடியாக அனுப்பலாம். இந்த அநியாயமான கொள்கை குறித்து மரியாதையான முறையில் மூன்று நிமிடங்களுக்குமேல் எடுக்காமல் தொடர்பு கொள்வது மிகவும் முக்கியமானது

விசுவாசத்தை காத்துக்கொள்வதற்கும் அதைத்தக்க வைத்துக்கொள்வதற்கும் நீங்கள் செய்யும் அனைத்திற்கும், அரசியல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்காகவும் நீங்கள் தொடர்ந்து ஜெபம் செய்வதட்காகவும் என் நன்றியை தெரிவிக்கிறேன். டொரோண்டோ மறைமாவட்டத்தின் பாதுகாவலரான இறைதூதர் புனித மைக்கேலே எங்களுக்காக மன்றாடும்.

கிறிஸ்துவில் உண்மையுள்ள

+ Thomas Card. Collins

தோமஸ் கருதினால் கொலின்ஸ்

டொரோண்டோ மறைமாவட்டப் பேராயர்